
1

## சிறப்பு வரைபடங்கள் 1.2
## பயன்பாடுகளுக்கான செலவினைப் பிரதிபலிக்கக்கூடிய விலையிடலின் முக்கியத்துவம்

நுகர்வோரின் வருமான அளவைப் பொருட்படுத்தாமல், அவர்களுக்கு 'பொதுப்படையான' தன்மையிலான நிவாரணத்தை வழங்குவதற்கு மின்சாரம் மற்றும் எரிபொருள் போன்ற பயன்பாடுகளுக்கான குறைந்தளவிலான செலவிலான விலையிடலை மேற்கொள்ளும் நீண்ட பாரம்பரியத்தை இலங்கை கொண்டிருந்தது. இச்சலுகைகள் இலங்கை மின்சார சபை மற்றும் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் போன்றவற்றின் நிதியியல் செயலாற்றம் மீது குறிப்பிடத்தக்க பாதிப்பை ஏற்படுத்தின. இத்தகைய அரசிற்கு சொந்தமான வியாபாரத் தொழில் முயற்சிகளின் திரவத்தன்மைப் பற்றாக்குறைகள் வங்கித்தொழில் துறையினால் நிதியளிக்கப்பட்டதுடன், அதன்மூலம் ஏனைய உற்பத்தித்திறன் வாய்ந்த முதலீடுகள் குறைவடைந்து காணப்பட்டன.

இவ் அரசிற்கு சொந்தமான வியாபாரத் தொழில்முயற்சிகளின் நிதியியல் ஆற்றல்வாய்ந்த தன்மையைப் பாதுகாப்பதற்கு, 2022இல் இம்மரபுசார்ந்த படுகடன்களின் பகுதியொன்றினை ஏற்பதற்கும் செலவினைப் பிரதிபலிக்கக்கூடிய விலையிடல் பொறிமுறைகளுக்கமைய, 2022 மற்றும் 2023ஆம் ஆண்டுகளில் எரிபொருள் விலைகள் மற்றும் மின்சாரக் கட்டணங்களின் கணிசமானச் சீராக்கங்களை மேற்கொள்வதற்கும் அரசாங்கம் நிர்பந்திக்கப்பட்டது. அன்றிலிருந்து, இலங்கை மின்சார சபையும் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனமும் ஆண்டுதோறும் இலாபமீட்டி வருகின்றன. இலக்கிடப்படாத மின்வலு உதவித்தொகைகள் பொதுமக்களுக்கும் வியாபாரங்களுக்கும் குறுகிய கால நிவாரணங்களை வழங்கினாலும் இறுதியில் மின்வலுவிற்கான உயர் விலைகள், வரிகள் மற்றும் ஒட்டுமொத்த பணவீக்கம் போன்ற வடிவங்களில் திரட்டப்பட்ட செலவை அவர்கள் சுமக்க வேண்டியிருந்ததென்பதனை இவ்வனுபவம் வெளிப்படுத்தியுள்ளது. பேரண்டபொருளாதாரத்திற்கான நீண்ட கால இழப்புகளுக்கு வழிவகுக்கின்ற குறுகிய கால வருமானங்களுக்கு குறைந்தளவு செலவு விலையிடல் என்ற கடுமையான சுழற்சியைத் தடுப்பதற்கு செலவினைப் பிரதிபலிக்கக்கூடிய விலையிடலை தொடர்வது அவசியமாகும். ஆதலால், பயன்பாடுகளின் தவறான விலை நிர்ணயங்களின் ஊடாக அனைவருக்கும் 'பொதுப்படையான' தன்மையிலான நிவாரணமொன்றினை வழங்குவதற்குப் பதிலாக, பொருளாதாரத்தின் தேவையான பிரிவினர்களுக்கு இலக்கிடப்பட்ட நன்மைத் திட்டங்களின் ஊடாக மேலதிக ஆதரவு வழங்கப்பட முடியும். எனவே, பயன்பாடுகளுக்கான செலவு பிரதிபலிப்பு விலையிடல் பொறிமுறையிலிருந்து விலகுவது அரசாங்கத்திற்கோ அல்லது வியாபாரங்களுக்கோ அல்லது பொதுமக்களுக்கோ நீண்ட காலத்திற்கு பயனளிக்காது. மேலும், தொழிற்பாட்டு வினைத்திறன் மற்றும் போட்டித்தன்மையினை மேம்படுத்தும் வேளையில் நுகர்வோருக்கு நன்மைகளை வழங்குவதற்காக உற்பத்திச் செலவைக் குறைக்கின்ற நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படக்கூடும்.

இலங்கை மின்சார சபை மற்றும் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் நிதியியல் செயலாற்றம் (ஆண்டிற்கான இலாபம்/ இழப்பு)




*மூலங்கள்:* இலங்கை மின்சார சபை
இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்